Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 860/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கஸ்தூரி | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | மகாராஜா | சமயம் | - | |
| கிராமம் | - | அருணாபுரம் | வயது | - | 50 |

02.03.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை, 1, 2 எதிரிகள் தரப்பில் பாரதிய நியாயக் சுரக்ஷா சங்ஹிதா பிரிவு **355** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது,

**முதல் விசாரணை**

1. நான் அருணாபுரத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி எனது கொழுந்தனார், 2வது எதிரி கொழுந்தனாரின் மனைவி. ஏற்கனவே எங்களுக்குள் தண்ணீர் இறைப்பது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது.

2. ஒருநாள் மதியம் 2 மணியளவில் எனது கணவர் தண்ணீர் பாய்ச்சுவதற்காக நிலத்திற்கு சென்றபோது எதிரி சாரங்கபாணி என் கணவரை உன்பொண்டாட்டியை போவ, எங்கடா போற நிலத்தில் உனக்கு என்ன வேலை என அசிங்கமாக பேசினார். அப்போது எதிரி சாரங்கபாணி அங்கிருந்த கருங்கல்லால் எனது கணவரின் பின்னந்தலையில் அடித்தார். எனது கணவர் கீழே விழுந்தவுடன் எதிரி சாரங்கபாணி எனது கணவரை தடியால் முதுகில் அடித்தார். தடுக்கச் சென்ற என்னை எதிரி ஜெயம்மாள் அருவாளால் வெட்ட வந்தார்.

3. மேலும் என்னைப் பார்த்து ஊரபோனவளே என அசிங்கமாக பேசினார். பின்பு காயமடைந்த எனது கணவரை டாடா ஏசி வாகனம் மூலம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்..

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 860/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | மகாராஜன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | சுப்பிரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | அருணாபுரம் | வயது | - | 55 |

02.03.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை, 1, 2 எதிரிகள் தரப்பில் பாரதிய நியாயக் சுரக்ஷா சங்ஹிதா பிரிவு **355** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது,

**முதல் விசாரணை**

1. நான் அருணாபுரத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 1 வது எதிரி எனது தம்பி, 2 வது எதிரி தம்பியின் மனைவி. ஏற்கனவே எங்களுக்குள் தண்ணீர் இறைப்பது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. ஒருநாள் மதியம் 2 மணியளவில் நான் தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்றபோது எதிரி சாரங்கபாணி என்னைப் பார்த்து தேவிடியா பையா எங்கடா போற நிலத்தில் உனக்கு என்ன வேலை என அசிங்கமாக பேசினார். அப்போது எதிரி அங்கிருந்த கருங்கல்லால் எனது பின்னந்தலையில் அடித்தார்.

2. தடியால் அடித்தார். என் மனைவி வந்து தடுத்த எதிரி ஜெயம்மாள் என்பவர் கத்தியால் வெட்ட வந்தார். என் மனைவி நகர்ந்ததால் அவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. பின்பு காயமடைந்த என்னை டாடா ஏசி வாகனம் மூலம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். மறுநாள் 11 மணியளவில் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான்

கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ-1 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்..

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.